சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண். ஓ.எஸ்.109/2015

2018ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/ பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் PW.2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சுயம்புசெல்வம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் கருப்பசாமி | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை</u>

19.11.2018 - நான் இந்த வழக்கில் வாதி தரப்பில் 2வது சாட்சி. என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில்உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ.13 ஆகும்.

<u>குறுக்கு விசாரணை</u> (3, 4, 7 பிரதிவாதிகள் தரப்பில்)

6ம் பிரதிவாதியின் உடன்பிறந்த தம்பி நான் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி கதிரேசனுக்கு நான் மைத்துனர் என்றால் சரிதான். கதிரேசன், போதும்பொன்னுவுடன் நான் பேசிக்கொள்வதில்லை. கருப்பசாமி கோவில் பிரச்சினையால் நான் பேசிக்கொள்வதில்லை. எங்கள் கோவிலில் கதிரேசன் பூசாரி. அது சம்பந்தமாக வழக்கு இல்லை. கார்த்திகை செல்விக்கும், கதிரேசன், போதும்பொன்னுவுக்கும் வழக்கு நடக்கிறதா என்று தெரியாது. நான் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த திருப்பத்துார் அருகே உள்ள இ.மலம்பட்டி என்ற ஊரில் கொத்தனார் வேலை செய்கிறேன். என்னுடைய குடும்பம் அங்கு தான் இருக்கிறது. அங்கு வாடகை வீட்டில் குடியிருக்கிறேன். 2 வருடமாக அங்கிருக்கிறேன். கரிசல்குளத்தில் நிரந்தரமாக இருப்பதாக நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வரவில்லை. சேகர் தான் என்னை சாட்சிக்கு அழைத்து வந்தார். அவர் எனக்கு மாமன் மகன் முறை வேண்டும். போஸ் மருந்து

குடித்ததாக சொன்னார்கள். நான் போய் பார்த்தேன். கார்த்திகை செல்வி பிறந்த தேதி தெரியாது. கமலம் ஏழுமலை என்பவரை திருமணம் செய்த தேதி தெரியாது. போஸ் இறந்த தேதி தெரியாது. இந்த வழக்கு சுப்பிரமணியதேவர் வீட்டு சொத்திற்காக வழக்கு நடக்கிறது. எனக்கு திருமணம் நடந்த தேதி தெரியாது. இந்த வழக்கில் உள்ள சொத்தில் போதும்பொன்னுவுக்கோ, கதிரேசனுக்கோ பாகம் இல்லை என்றால் சரிதான். சர்வே நம்பர்.27/16ல் போதும்பொன்னுவுக்கும், கதிரேசனுக்கும் பாகம் உள்ளது. கார்த்திகைசெல்விக்கும், போதும்பொன்னுவுக்கும் வழக்கு நடப்பதாக நீதிமன்றத்திற்கு வருவார்கள். எந்த சொத்திற்கு வழக்கு நடக்கிறது என்று தெரியாது. என்னை அழைத்து வந்த வாதி சேகரிடம் எதற்காக போதும்பொன்னுவையும், கதிரேசனையும் இந்த வழக்கில் சேர்த்தீர்கள் என்று நான் கேட்கவில்லை. நானும், சேகரும், கதிரேசனும், போதும்பொன்னும் ஒன்றாக சேர்ந்து இந்த வழக்கு நடத்துகிறோம் என்றும், நாங்கள் 3ம் பிரதிவாதிக்கு எதிராக ஒன்றாக சேர்ந்து வழக்கு நடத்துகிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள சர்வே நம்பர்.27/16 என்று காட்டப்பட்டுள்ள 15வது இலக்க சொத்து யாருடையது என்று தெரியாது. என்னுடைய சொந்த நிலத்தின் சர்வே நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. என் பெயரில் சொத்து எதுவும் இல்லை. அதனால் சர்வே நம்பர் தெரியாது. அன்றாட கூலி வேலை செய்கிறேன். 3ம் பிரதிவாதி மீது உள்ள விரோதத்தின் காரணமாக அவரை எதிர்த்து சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் சரியல்ல. கார்த்திகைசெல்வி என்பவர் போஸ் என்பவருக்கு பிறந்த மகள் என்றால் சரியல்ல. போஸ் இறக்கும்போது கார்த்திகைசெல்வி பிறந்திருந்தார் என்றால் சரியல்ல. நான் பணம் பெற்றுக்கொண்டு பொய்யாக சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u> (5, 6 பிரதிவாதிகள் தரப்பில்)

கால அவகாசம் கேட்கப்பட்டது,

<u>மறுவிசாரணை</u>

இல்லை